Fruit Farm in Cape Comorin

* 479. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Cape Comorin Fruit Farm in Kanyakumari district is to be developed into a Research Centre; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஆம், கன்னியாகுமரியிலுள்ள பழப்பண்ணையை ஒரு ஆராய்ச்சி நிலையமாக ஆக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான முழு விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ் : எப்போது அது தனி ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விரைவில் அதுபற்றி முடிவு செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒட்டப்பிடாரத்தில் தீவிர வாழை சாகுபடித்திட்டம்

* 480 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த கிராமங்களில் வாழை பயிரிடுவதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தூத்துக்குடியிலும், அதன் சுற்றுப்புறத்திலும், தீவிர வாழை சாகுபடித்திட்டம் ஒன்று செயல் பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த கிராமங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நீண்டகாலக், குறுகிய காலக் கடன்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமும், வணிக வங்கிகள் மூலமும், ஒரு எக்கருக்கு ரூ. 1,000 வீதம் வாழை பயிரிடுவதற்காக அளிக்கப்படுகின்றன. தீவிர வாழை சாகுபடி திட்டத்தை கவனிக்கவும், விவசாயிகளுக்கு தீவிர வாழை சாகுபடி முறைகளைப்பற்றி அறிவுறுத்தவும் ஒட்டப்பிடாரத்தில் ஒரு விவசாய உதவியாளர் பணிபுரிந்து வருகிறார்.

திரு. எம். முத்தையா : ஒட்டப்பிடாரத்தில் எத்தனை கிராமங்கள் இந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அந்தத் திட்டம் திருநெல்வேலி ஜில்லாவில் எந்த இடங்களில் எல்லாம் விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது ?